# கிறிஸ்துவின் செயல் கிறிஸ்தவ வாழ்வு முறைக்கு அழைக்கிறது [தீத்து 3]

*"தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டவட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; ..." (தீத்து 3:8).*

தேவனுடைய கிருபை பற்றியும் அது எல்லா மக்களுக்கும் எவ்வாறு பிரசன்னமாயிருந்தது என்பது பற்றியும் 2:11-14ல் முழுமையாகக் கலந்துரையாடிய பவுல், நமக்கு வாழ்வைப் பற்றியும் நற்கிரியைகளில் நாம் வைராக்கியமாய் இருத்தல் பற்றியும் அறிவுறுத்தினார். 3:1-11ல் கிறிஸ்துவினிமித்தம் வாழ்வதற்குத் தேவையான திட்டவட்டமான கிறிஸ்தவ நடக்கைகளை அவர் விவரித்தார். இந்தத் திட்டவட்டமானவைகள் தனிநபர்களுக்கு (3:1, 10, 12, 13), நடக்கையின் கொள்கைகளுக்கு (3:2, 3), மற்றும் நமக்காக தேவகிருபை செயல்படுதல் பற்றிய உணர்வுக்கு (3:4-6) உரியவற்றை எடுத்துரைக்கின்றன. இந்த ஈடுபாடுகள் யாவையும் 3:6ல் எடுத்துரைக்கப்பட்ட மாபெரும் உச்சகட்டம் ஒன்றுக்குத் தொடர்பு படுத்தப்படுகின்றன: "தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்திரராகத் தக்கதாக." உலகப் பிரகாரமானவற்றின் சோதனைகளில் அந்த மகிமையுள்ள இலக்கானது அடிக்கடி காணாது விடப்படுகின்றது. பவுலின் முடிவு விளக்கங்கள் (3:12-15) அவர் தமது நிறைவான (இறுதியான) வாழ்த்துக்களை அனுப்புகையில் அவரது கவனம் செலுத்துதலை/கவனக் குறியைப் பராமரிக்கின்றன.

## பாடம் 5: கிறிஸ்துவின் நிமித்தமும் கிறிஸ்தவ நடக்கையும் (3:1-11)

### (வாழும்படி) அழைக்கப்பட்டுள்ள வாழ்வுநடை (வ. 1, 2)

**குடிமை விஷயங்களில் (வ. 1)**

பவுல், "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து

அடங்கியிருக்கவும், ... அவர்களுக்கு நினைப்பூட்டி" (3:1) என்று கூறினார். கிறிஸ்தவர்கள் எப்பொழுதுமே அதிகாரத்திற்கு மரியாதை தரும் வகையில் நடந்து கொள்வார்கள் (அப். 23:1-5; 1 பேது. 2:13-17ஐக் காணவும்). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நடக்கையானது "அதிகாரங்களுக்கு"[1] கீழ்ப்படிதல்[2] மற்றும் அடங்கியிருத்தலுக்கு அழைக்கிறது. (அதிகாரங்கள் என்ற) இது ஆள்பவர்கள் மற்றும் அதிகாரிகள் - சட்டம் இயற்றுபவர்கள் மற்றும் சட்டத்தை செயல்படுத்துபவர்கள் - ஆகிய இரு தரப்பாரையும் குறிக்கிறது. ''கீழ்ப்படிதல்'' என்றால் அதைச் செய்தல் என்று அர்த்தப்படுகிறது, "அடங்குதல்" என்பது ஒருவர் (தாம்) செய்கின்ற செயலில் கொண்டுள்ள எண்ணப்போக்கு பற்றிய கருத்தைக் கொண்டுள்ளது (ஒரு இணையான கட்டமைப்பிற்கு எபி. 13:17ஐக் காணவும்). இந்த வார்த்தைகளை ஒன்று சேர்த்துக் காணுகையில், இவை சட்டம் கேட்டுக் கொள்வதைச் செய்தல் மற்றும் அதைச் செய்வதில் ஒரு நல்லெண்ணப் போக்கைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றன.

கர்த்தருடைய மக்கள் ''எல்லா நற்செயல்களுக்கும் தயாராக''[3] இருந்தால், அடங்குதலும் கீழ்ப்படிதலும் இயல்பாக வர வேண்டும் (எபே. 2:10; கலா. 6:9, 10; தீத்து 2:14). இது இந்த சந்தர்ப்பப் பொருளில் இன்றியமையாத நிபந்தனை விதித்தலாக உள்ளது. ஆள்பவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிதலுடன் அடங்குதல் என்பது "நற்செயல்களுக்கு" தொடர்புடையதாக இருக்கிறது. இது தீமை செய்யும்படி கிறிஸ்தவர்களை அழைக்கும் அதிகாரிகளை உள்ளடக்குவதில்லை (ரோமர் 13:1-7ல் கொடுக்கப்பட்டபடி ஆள்பவர்களுக்கான தேவனுடைய தெய்வீக திட்டத்தைக் கவனிக்கவும்), மற்றும் இது சமுதாய விஷயங்களில் ஜாக்கிரதையின்றி செயல்படும் கிறிஸ்தவர்களை நீக்கிப் போடுகின்றது (மத். 5:13-16; 22:17-21ஐக் காணவும்). கிறிஸ்தவர் என்பவர் நற்செயல்களைச் செய்வதற்கு வாய்ப்புள்ள எந்த வேளையிலும் செயல்படத் தயாராக இருக்க வேண்டும்.

குடிமை அதிகாரிகள் அடிக்கடி தேவனுடைய மக்களுக்கு முன்பாக தங்களின் சமூகங்களில் ஒழுக்க தவறுகளைத் திருத்துவதிலும் ஒழுக்க ரீதியான நடக்கைகளை உற்சாகப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது கவலைக்குரிய உண்மையாக உள்ளது. கிறிஸ்தவர்கள் பேரணிகளை ஒருங்கமைக்க வேண்டும் என்றோ அடையாளங்களை அசைத்துக் காட்ட வேண்டும் என்றோ பவுல் கருத்துத் தெரிவிக்கவில்லை, ஆனால் தேவனுடைய மக்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் அடியெடுத்து வைத்து, ஒழுக்கம் மற்றும் ஒழுக்க ரீதியான நடக்கையில் தேவபக்தியின் வெளிப்படையான உதாரணத்தை அமைக்க வேண்டும் என்று அவர் (பவுல்) அழைத்தார்.

### சமூக விஷயங்களில் (வ. 2)

தக்க வகையிலான நடக்கை என்பது தவிர்க்க வேண்டிய செயல்களையும், செய்யப்பட வேண்டிய செயல்களையும் உள்ளடக்குகின்றது. கிறிஸ்தவர் என்பவர், ஒருவரையும் "தூஷிக்கக்"[4] கூடாது (3:2). பேச்சின்

இவ்வகையானது கிறிஸ்தவர்களுக்கு ஒருக்காலும் பொருந்துவதாயிருப்ப தில்லை. கெட்ட வார்த்தை ஒன்றும் நமது வாயிலிருந்து புறப்படக் கூடாது (எபே. 4:29; கொலோ. 4:6; 1 பேது. 3:9, 10 ஆகியவற்றைக் காணவும்). இப்படிப்பட்ட பேச்சு நல்ல நோக்கத்திற்கு உதவுவதில்லை மற்றும் இது மனித உறவுமுறைகளில் பயன் அளிப்பதாய் இருக்க முடியாது.

கிறிஸ்தவர் "சண்டை பண்ணாதவராய்"[5] இருக்கின்றார். கண்காணி களின் பண்பினங்கள் (1 தீமோ. 3:3) ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்து கின்றன என்று குறிப்பிடுவதற்கு இது ஒரு நல்ல இடமாக உள்ளது. கேட்டுக் கொள்ளப்படும் இந்த நடக்கையின் மேன்மைமிக்க ஒரு உதாரணம் எரேமியாவினால் கொடுக்கப்பட்டுள்ளது. "கர்த்தர் கூறுவதாவது" என்பதை அவர் விளக்கப்படுத்த வேண்டியிருந்த பொழுது, அவர் தவறாக நடத்தப் பட்ட வேளையிலும் கூட, இன்னொரு நாளில் திரும்பி வருவதற்காக அவர் தாழ்மையுடன் வெளி நடந்து சென்றார் (எரே. 28:1-16).

கிறிஸ்தவர் "பொறுமை"[6] யுள்ளவராய் இருக்க வேண்டும். சண்டை நடக்கக் கூடிய அமைவு காட்சிப்படுத்தப்படும் பொழுது தெளிவான இந்த ஆவியானது இன்னும் அதிகமாய் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

கிறிஸ்தவர் "சாந்த குணத்தை"[7] காண்பிக்க வேண்டும், அவரது சாந்த குணம் எல்லா மக்களுக்கும் காண்பிக்கப்பட வேண்டும். (இந்த) கிரேக்க வார்த்தையானது உறுதிப்பாட்டின் பலத்தை மறைமுகமாய் உணர்த்து கின்றது, ஆனால் அந்த பலமானது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. பார்க்ளே அவர்கள், இந்த வார்த்தையை, காட்டு விலங்கொன்று சேணத்திற்கும் கடிவாளத்திற்கும் கீழ்ப்படிதல் உள்ளதாவதற்கு இதன் (இவ்வார்த்தையின்) பயன்பாட்டினால் விவரித்தார். எல்லா பலமும் இன்னமும் இருக்கிறது, ஆனால் அது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.[8]

## அக்கறையுள்ள சிருஷ்டிகரினால் மாற்றம் (வ. 3-7)

மனம் திரும்புதல் மற்றும் மனமாற்றம் என்பவை மாற்றத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றன. மனந்திரும்புதல் என்பது மனமாற்றத்திற்கு வழிநடத்து கிறதான சிந்தையின் மாற்றமாக உள்ளது, இது (வாழ்வின்) ஓட்டம் மற்றும் நடக்கையின் மாற்றமாக உள்ளது. அடுத்ததாகப் பவுல், இப்படிப்பட்ட மாற்றங்கள் ஒழுங்குமுறையில் ஏன் உள்ளன என்பதை விளக்கும் பண்பினங்கள் சிலவற்றை அடையாளப்படுத்தினார்.

### மனிதரின் மதியீனம் மாற்றத்திற்கு அழைக்கிறது (வ. 3)

பவுல், "ஏனெனில் முற்காலத்திலே நாமும் ... இருந்தோம்" (3:3) என்று உரைத்தார். இந்த மதியீனங்களில், துன்புறுத்துபவராய் இருந்த பவுலின் (சவுலின்) வாழ்வில் பண்புகளாய் இருந்தவை எத்தனை? அவருடன் நீங்கள் எத்தனை பண்புகளைப் பகிர்ந்து கொள்கின்றீர்கள்?

நீங்கள் ''புத்தியீனராக''[9] இருந்திருக்கின்றீர்களா? சிந்தியாமல் இருப்பதினால், மதிநுட்பமற்றவர்களாயிருப்பதினால், அல்லது புலன்

விருப்பங்களை வளர்த்துக் கொள்வதினால் மனிதர்கள் புத்தியீனராக இருக்க முடியும். நாம் யாவருமே நமது வாழ்வில் சில மதியீனமான செயல்களை அல்லது மதியீனமாய் இருந்த வேளைகளை நினைவு படுத்திக் கொள்ள முடியும். நாம் நன்கு அறிந்திராததால் இது மதியீனமானதாக/ புத்தியீனமானதாக இருந்திருக்கலாம் (இது பவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த பொழுது அவரது நிலை போன்றது; அப். 23:1), அல்லது நாம் சிந்திக்காமல் இருந்து விட்டதால் நாம் புத்தியீனமாய் இருந்திருக்கலாம்!

நீங்கள் "கீழ்ப்படியாதவர்களாய்"[10] இருந்திருக்கின்றீர்களா? இது கவனிக்காமல் இருக்கும் நபரிடத்தில் அடிப்படையான விஷயமாக உள்ளது. இவ்வகையான நபர் ஒருவர் பின்னாட்களில், "ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்து கொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங் குறைய எல்லாத் தீமைக்கு முள்ளானேனே!" என்று கூறுபவராயிருப்பதாக நீதி. 5:12-14 சித்தரிக்கிறது.

நீங்கள் வழி தப்பி "நடக்கிறவர்களாய்"[11] இருந்திருக்கின்றீர்களா? சில மக்கள், தவறான வழியில் செல்லத் தூண்டும் வேலையில் மிகவும் மென்மை யானவர்களாய் இருக்கின்றனர் (ரோமர் 16:17, 18; 1 யோவா. 4:1ஐக் காணவும்). நாம் ஜாக்கிரதையாய் இராவிட்டால், அவர்களின் கண்ணிகளில் பிடிக்கப்பட்டு விடுவோம்!

நீங்கள் பல வித "இச்சைகளுக்கு"[12] அடிமைப்பட்டவர்களாய் இருந்திருக்கின்றீர்களா? மக்கள் இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் "அடிமைப்பட்டவர்களாக"[13]க் கூடும். மக்கள் தாங்கள் "பிடிக்கப்படும்" - இந்த வாழ்வு முறைக்கு அடிமைப்பட்டுப் போகும் - வரைக்கும் இந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள ஓட்டங்களை மதியீனமாய் நாடும் பொழுது, அது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது. அவர்கள் தாங்கள் திருப்தியடையாதவர்களாயிருப்பினும், இந்த வாழ்க்கை முறையானது விரும்பத் தக்கதல்ல என்று உணர்ந்த போதிலும், தொடர்ந்து இவ்விதத் திலேயே வாழ்கின்றனர். இந்த இடத்தில் நாம் (நல் வாழ்வு வாழாமல்) விட்டுக் கொடுத்திருக்கையில், தேவன் நம் மீது (செயல்படுவதை) விட்டுக் கொடுக்கவில்லை என்று 4ம் 5ம் வசனங்கள் காண்பிக்கின்றன.

பவுலின் விவரித்தலின்படி, கிறிஸ்துவை அறியாதவர்கள் "துர்க்குணத் தோடும்"[14] "பொறாமையோடும்"[15] வாழ்கின்றனர். நாம் பொறாமை கொண்டவர்களாய் இருக்கும் பொழுது, நாம் தொல்லைக்குக் கனிந்தவர் களாய்/தொல்லையை அதிகம் வளர்ப்பவர்களாய் இருக்கின்றோம் (யாத். 20:17). கிறிஸோஸ்தோம் என்பவர், "அந்துப் பூச்சியானது ஆடையை அரித்து உண்பதைப் போலவே, பொறாமையானது ஒரு மனிதனைப் பட்சிக்கிறது"[16] என்று கூறினார். இப்படிப்பட்ட நபர் ஒழுக்கமற்றவராகவும் திருப்திப் படுத்தப்பட முடியாதவராகவும் இருக்கின்றார்.

இப்படிப்பட்ட மனிதர் "பகைக்கிறவராக"[17] ஆகி, தன்னையும் தனது செல்வாக்கின் கீழான வட்டத்திற்குள் வருகிற எல்லாரையும் புண்படுத்தக்

கூடியவராவது என்பது பெரும்பாலும் இயல்பானதாகவே உள்ளது. இப்படிப்பட்ட நபரைச் சுற்றிலும் நாம் இருத்தலாகாது. யூதாஸ் காரியோத்தைப் பற்றிய கிறிஸ்துவின் விளக்கமானது இப்படிப்பட்ட நபருக்குப் பொருந்துவதாயிருக்கும்: "... அந்த மனுஷன் பிறவாதிருந்தானா னால் அவனுக்கு நலமாயிருக்கும்" (மத். 26:24). இந்த நபர் விரும்பத்தக்க ஒரு துணையாளர் அல்ல.

## தெய்வீக தயவு நித்திய பலன்களுடன் நேர்மறையான மாற்றம் ஒன்றை அருளுகிறது (வ. 4-7)

நமது பயங்கரமான சோதனைகள் மனித மதியீனத்தைக் குறிப்பிடுவதா யிருப்பதால், அருளிரக்கம் உள்ள தேவன் இன்னும் நம்மை அடைந்து நமக்குள் சாத்தியக் கூற்றினைக் காண்பார் என்பது எவ்வளவு மேன்மை யானதாக உள்ளது! இது தேவனுடைய பகுதியில் உண்மையாகவே "தயவின்"[18] சைகையாகவே உள்ளது (3:4). Robinson அவர்கள் "தயவு" என்பது "பிறரை நோக்கியதாக நபர்களிடத்தில் காணப்படும் பயன்நிறைந்த தன்மை"[19] என்று விவரித்தார். வெறுக்கத் தக்க (பகைக்கத் தக்க) அளவுக்கு நாம் சென்றடைந்திருந்த பொழுது, நம்மிடத்தில் வந்து நம்மை உன்னத வட்டாரங்களுக்கும் மேன்மையான வாழ்வு நடைகளுக்கும் உயர்த்து மளவுக்கு தேவன் தயவுள்ளவராயிருந்தார் என்பது நமக்கு எவ்வளவாய் பயன் நிறைந்ததாக உள்ளது!

தேவன் தமது "அன்பின்"[20] காரணத்தினால் தயவைக் காண்பிக்கிறார். இவ்விடத்தில் "அன்பு" என்பதற்கு வழக்கமாகத் தேவனுடன் தொடர் புடைய வார்த்தையான agape என்பது வருவதில்லை (1 யோவா. 4:8; ரோமர் 5:8 ஆகியவற்றைக் காணவும்). அதற்குப் பதிலாகப் பவுல், உபகார சிந்தையுள்ள அன்பையும் தயவையும் விளக்கப்படுத்துகிற ஒரு வார்த்தை யைத் தக்க வகையில் பயன்படுத்தினார் (இதையே இந்தச் சந்தர்ப்பப் பொருள் இரந்து கேட்கிறது மற்றும் தேவனும் இதை ஏராளமாகக் கொண்டுள்ளார்).

"இரக்கம்"[21] என்பது தேவனுடைய நற்பண்பின் இன்னொரு அம்சமாக உள்ளது. மிகப் பெரிதான தேவைக்கு (இவை) என்ன அழகுமிக்க பண்புகளாக உள்ளன! நமது மாபெரும் தேவையைக் கருதி "அவர் நம்மை இரட்சித்தார்" (3:5). பாவம் செய்திருந்த நாம் நம்மையே இரட்சித்துக் கொள்ள ஒன்றும் செய்ய முடியாதவர்களாய் இருந்தோம் (ரோமர் 3:23; 5:6-11; 2 கொரி. 3:5, 6; 1 யோவா. 1:8, 10).

மன்னிப்புடன் தொடர்புடைய திட்டமானது இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது: (1) "மறு ஜென்ம முழுக்கு" என்பது கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதினால் ஒரு புது வாழ்வைப் பெறுவதற்கு வழியாக உள்ளது (கலா. 3:26, 27; ரோமர் 6:3, 4; 2 கொரி. 5:17).[22] (2) பரிசுத்த ஆவியானவரின் "புதிதாக்குதல்"[23] என்பது அவருடைய தெய்வீக வாக்குத் தத்தத்தின் நிறைவேற்றத்தில் உள்ளது. ஆவியானவரினால் புதிதாக்கப்படுகிற இவ்விஷயமானது புதுப்பிறப்புடன்

தொடர்புடையதாக இருந்தால், வசனமே ஆவியானவரின் முகவராய் உள்ளது (1 பேது. 1:22, 23ஐ மாற். 16:15, 16 உடன் ஒப்பிடவும்; 1 கொரி. 12:13; எபே. 5:25). இது கிறிஸ்துவுக் குள்ளான நமது வாழ்வில் ஆவியானவரின் புதிதாக்குதலாய் உள்ள தென்றால், இது கலா. 5:22, 23ன் கனியைக் கொண்டு வருவதாயிருக்கிறது.

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே புதிய பிறப்பைச் சாத்திய மாக்குகிற *நபராய்* இருக்கிறார் (3:6; அப். 4:12ஐக் காணவும்). 2:11-14ல் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பி யிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகு தலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் ... நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்.

அந்த தெய்வீக திட்டத்தினாலும் அந்த குறிப்பிடத்தக்க நபரினாலும் நமக்குத் திறக்கப்பட்ட *சாத்தியக் கூறானது* இருமடங்கானதாக உள்ளது: (1) நாம் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டுள்ளோம் (எபே. 2:1-10), மற்றும் (2) நாம் நித்திய ஜீவனுக்கு வாரிசுகளாக்கப் பட்டுள்ளோம் (3:7; 1:2; எபி. 5:8, 9). நாம் கடந்த காலத்தில் செய்திருந்த நமது தவறுகள் மன்னிக்கப்பட்டவர்களாக, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்காக தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுத்துக் கொள்ளப் பட்டோம் (கலா. 4:4-7ஐக் காணவும்). வில்லியம் பென் அவர்கள் கூறியது போல, ''ஒருக்காலும் முடிவடையாத வாழ்வைப்பற்றி அறிந்து கொள்ளுதலே வாழ்வின் மிக மிக உண்மையான முடிவாய் உள்ளது.''[24]

## விசுவாசிகள் மத்தியில் விசேஷித்த நடக்கை (வ. 8-11)

"சகல விதமான நற்கிரியைகளை" (3:1) செய்ய ஆயத்தமாவதற்குரிய வழிகாட்டு நெறிகளை வசனங்கள் 2 முதல் 7 வரை உள்ள பகுதி அளித்தது. அந்த வசனங்களில் பவுல், கேட்டுக் கொள்ளப்படும் நடக்கை, தேவைப் படும் சரிப்படுத்துதல்கள் அல்லது மாற்றங்கள், மற்றும் தேவன் தம் தயவு, அன்பு, இரக்கம் ஆகியவற்றால் (நமக்குக்) கிடைக்கச் செய்துள்ள தெய்வீக பயன்கள் ஆகியவற்றை முன் வைத்தார். வசனங்கள் 8 முதல் 11 வரை உள்ள பகுதியானது நாம் அந்த நல்வாழ்வையும் நற்செயல்களையும் கைக் கொள்ளும்படியாகவும், எந்த நபராவது தேவனுடைய மாபெரும் அமைப்புக்குத் தடங்கல் ஏற்படுத்த முயற்சி செய்தால், மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளை அடையாளம் காணும்படியாகவும் நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.

## *பிரயோஜனமான செயல்கள் (3:8)*

*தீத்து இந்த விஷயங்களை "திட்டமாய்"[25] உறுதிப்படுத்த வேண்டு மென்று பவுல் விரும்பினார். இந்த வார்த்தையானது புதிய ஏற்பாடு முழுவதிலும் 1 தீமோ. 1:7ல் மட்டுமே இன்னொரு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. இருப்பினும், அவ்விடத்தில் குறிப்பிடப்பட்ட மனிதர்கள் "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்ன தென்றும் அறியாதிருக்கின்றவர்களாய்" உள்ளனர். கள்ள போதகர்கள் அந்த ஆவியை வெளிப்படுத்துபவர்களாகவும், கர்த்தரின் சுவிசேஷ ஊழியர்கள் சத்தியத்தைத் திட்டமாய் முன்வைக்கத் தவறியவர்களாகவும் இருந்தால் அது எவ்வளவு பரிதாபத்திற்குரியதாய் இருக்கும்!*

*சகோதரர்கள் நற்செயல்களில் "ஈடுபடும்படி"[26] சுவிசேஷ ஊழியர்கள் புத்தி கூற வேண்டும் என்று பவுல் விரும்பினார். நற்செயல்கள் பராமரிக்கப் படுதற்காக, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களை (சகோதரர்களை)க் குறித்து அக்கறை கொண்டு அவர்களுக்குக் கவனம் தர வேண்டும். நாம் வேத வாக்கியங்களைப் படிப்பதினால் நற்கிரியைகள் செய்ய நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள முடியும் (2 தீமோ. 3:16).*

*நாம் ஏன் இவ்வித செயல்களைப் பராமரிக்க வேண்டும்? ஏனென்றால் அவை "நல்லவைகளாய்" உள்ளன - எனவே தேவனைப் பிரியப்படுத்து கின்றன. "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக் கிறார்" என்று எபேசியர் 2:10 கூறுகின்றது. மேலும் நற்செயல்கள் பிறருக்குப் பயனுள்ளவைகளாய் உள்ளன - எனவே மனிதரைப் பிரியப்படுத்துகின்றன (1 தீமோ. 4:8; கலா. 4:8ஐக் காணவும்; 1 கொரி. 15:58). அமெரிக்க விரிவுரை யாளரான டேல் கேர்நெஜி என்பவர், நண்பர்களை ஆதாயப்படுத்துவது எப்படி மக்களிடத்தில் செல்வாக்குப் பெறுவது எப்படி என்று பயிற்றுவிக்கத் தொடங்குவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே பவுல் நல்லுறவுகளுக்கான விதிகளை/சூத்திரங்களைக் கொண்டிருந்தார்.*

## *அப்பிரயோஜனமும் வீணுமான செய்கைகள் (3:9)*

*கிறிஸ்தவர்கள், கலந்துரையாடல்களின் சில வடிவங்களை "விட்டு விலகி"[27]யிருக்க வேண்டும் (3:9). நாம் "புத்தியீனமான"[28] தர்க்கங்களைத் தவிர்க்க வேண்டும். சகோதரர்கள் (பிரசங்கியார்கள் உட்பட) மத்தியில் ஒரு வேதாகம வகுப்பு அல்லது கலந்துரையாடலானது, கற்றறிதல், முன் சிந்தனை அல்லது ஞானம் இல்லாத தர்க்கமாக நேரத்தை விழுங்கிக் கொண்டிருந்தால், அது எவ்வளவு துன்பகரமானதாக உள்ளது! (யாக். 1:5ஐக் காணவும்). அது பக்தியற்றதாகவும் தேவனற்றதாகவும் கருதப்பட வேண்டும். இவ்வகையான பயனற்ற/தகுதியற்ற கலந்துரையாடலில் ஈடுபடுபவர்கள் இரட்சிப்புக்குத் தொடர்புடையவற்றை புறக்கணித்து இழிவாய்க் கருதுகிற நபரைப் போல் உள்ளனர்.*

*நாம் "வம்ச வரலாறுகளை" தவிர்க்க வேண்டும் (தீத்து 1:9, 10, 14;*

*1 தீமோ. 1:3-7; 6:3-5ஐக் காணவும்). இதற்கு மாறாக நாம் உண்மையுள்ள வசனத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள வேண்டும் - மற்றவர்களும் இதையே செய்யும்படி உற்சாகப்படுத்த வேண்டும். வம்ச வரலாற்றுச் செய்தியை ஆராய்வதை விட்டு விலக வேண்டும் என்பதே தீத்துவுக்குப் பவுலின் வேண்டுகோளாய் இருந்தது. அந்நாட்களில் இருந்த யூதப் புராணங்கள் தெய்வீக நிரூபணம் கொண்டிருந்ததுமில்லை, அவைகள் குடும்பப் பெருமைக்குக் காரணமாக மட்டும் இருந்ததுமில்லை (பிலி. 3:1-9; மத். 3:7-9; கலா. 3:26-29ஐக் காணவும்). "தாத்தா கூறியது என்ன" என்பதன் மீது கவனம் செலுத்தும் பொழுதோ அல்லது "இன்ன சகோதரர் இதை இவ்வழியில் செய்தார், அவர் எப்போதுமே நமது பிரியமான பிரசங்கி யாராக இருந்தார்" என்று வலியுறுத்தும் பொழுதோ நாமும் நமது நாட்களில் இதே கண்ணியில் விழுகின்றோம். மனிதரால் உண்டாக்கப்பட்ட பாரம்பரியங்கள் நமது வாழ்வில் முக்கிய (திறவுகோல்) செல்வாக்குச் செலுத்தும்படி நாம் அனுமதிக்கக் கூடாது, இவை கிறிஸ்துவுக்குள் நமது வளர்ச்சியைத் தடுத்து, அல்லது நற்செயல்கள் சிலவற்றிலிருந்து நம்மை (புறம்பே) இழுத்துவிட நாம் அனுமதிக்கக் கூடாது. சத்தியமே நியமமாக உள்ளது, மற்றும் கிறிஸ்துவே வழியாக உள்ளார் (யோவா. 8:32; 14:6; 2 யோவா. 9). இவைகள் நிலையானவைகளாகவும் சரியானவைகளாகவும் நிலைத்துள்ளன. கிறிஸ்துவிலிருந்தும் அவருடைய சத்தியத்திலிருந்தும் நம்மை விலக்குகின்ற எந்த நபரும், உறவினரும், பிறப்புரிமை(சொத்து)யும் அல்லது பாரம்பரியமும் விலக்கப்பட வேண்டும் (உபா. 13:1-9; மத். 10:34-37; லூக். 12:51-53; 14:25, 26; 1 கொரி. 1:10-13ஐக் காணவும்).*

*நாம் "சண்டையில்" ஈடுபடக் கூடாது. புத்தியீனமான தர்க்கங்களும், வம்ச வரலாறுகளின் மீதான தேவையற்ற வலியுறுத்தமும் சண்டைகளுக்கே மிகவும் அடிக்கடி வழிநடத்துகின்றன. இந்த விவாதங்கள் முக்கியத்துவம் எதுவுமற்றவைகளில் தொடங்கி, வார்த்தையைத் தவறாய்ப் பயன்படுத்து வதில் முடிந்து, சகோதரர்களை அடித்து நொறுக்கி விடுகின்றது.*

*மனிதர்களை ஒன்றுகூட்டி இழுக்க வேண்டிய கிறிஸ்துவின் பிரமாண மானது "வழக்குகளுக்கு"[29] வழிநடத்துமளவுக்கு மிகவும் மதியீனமாக/வறிய நிலையில் கையாளப்படும் பொழுது அது மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. இவ்வழி முறையில் சிலர் மனித ஆய்வுகளிலிருந்து ஆவிக்குரிய முடக்குவாதத்தைப் பெறுகின்றனர். அவர்கள் அற்பமானவற்றை முக்கியத் துவப்படுத்தி, முக்கியமானவற்றை (அல்லது சத்தியத்தின் அதிக கனமான விஷயங்களை; மத். 22:23, 24; கலா. 4:9-11ஐக் காணவும்) அற்பமாய்க் கருதுகையில் யூகங்களிலிருந்து கலவரம் அடைகின்றனர். இந்த நடக்கை யானது "பயனற்றதாக"(வளர்ச்சி எதையும் கொண்டு வராததாக)வும் "தகுதியற்றதாக" (நோக்கமற்றதாக)வும் உள்ளது.*

*வில்லியம் பார்களே அவர்கள் பின்வரும் சிந்தனைகளைப் பொருத்த மாய்த் தொகுத்துரைத்தார்:*

> *கிரேக்கத் தத்துவ வாதிகள், தங்களது நேரத்தை, நேர்த்தியாய் பின்னப் பட்ட பிரச்சனைகளின் மீது செலவிட்டனர். யூத ரபீக்கள் (குருக்கள்)*

தங்களது நேரத்தை பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் பற்றிய, கற்பனையும் பக்தி விருத்தியூட்டுதலும் கொண்ட வம்ச வரலாறு களைக் கட்டியெழுப்புவதில் செலவிட்டனர். யூத வேதபாரகர்கள், ஓய்வு நாளில் செய்யப்படக் கூடியது என்ன, செய்யப்படக் கூடாதது என்ன என்பது பற்றி விவாதிப்பதில் முடிவற்ற நேரங்களை செலவிட்ட னர். ஒரு மனிதர் மத ரீதியான கேள்விகளைக் கலந்துரையாடுவதினால் தம்மை மதப்பற்றுள்ளவர் என்று அவர் நினைத்துக் கொள்வது ஆபத்தானதாக உள்ளது என்று கூறப்படுகிறது. விவாதம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டுமே விவாதம் செய்கின்ற ஒரு வகையான கலந்துரையாடல் குழு உள்ளது. இல்லத்தில் அன்பாகவும் அக்கறையாக இருத்தல் என்பதைக் காட்டிலும் இறையியல் தொடர் பான கேள்விகளைக் கலந்துரையாடுவது மிகவும் சுலபமானதாக உள்ளது. கிறிஸ்தவ வாழ்வின் எளிய பணிப் பொறுப்புகள் செய்யப் படும்படிக் காத்துக் கொண்டிருக்கிற வேளையில், அமர்ந்து கொண்டு ஆழமான இறையியல் கேள்விகளைக் கலந்துரையாடிக் கொண்டிருப் பதில் ஒழுக்க நெறி எதுவும் இருப்பதில்லை. இப்படிப்பட்ட கலந்துரையாடல்கள் கிறிஸ்தவக் கடமைகளைச் செய்வதிலிருந்து தப்பித்தல் என்பது தவிர வேறெதுவுமாயிருக்க முடியாது என்பது உண்மையானதாகவே உள்ளது.

... இது கிறிஸ்தவக் கலந்துரையாடல்களுக்கே இடமில்லை என்று கூறுவதாகவே எவ்வகையிலும் அர்த்தப்படுவதில்லை; ஆனால் செயல்பாட்டில் முடிவடையாத கலந்துரையாடல் எதுவும் மிகப் பெருமளவுக்கு வீணாக்கப்பட்ட நேரமாகவே உள்ளது என்று இது கூறுகின்றது.[30]

## புரட்டுக்காரரான மக்களுக்கு திருத்தும் ஒழுக்க நடவடிக்கை அவசியம் (3:10, 11)

சில ஆத்துமாக்கள் தவறு செய்வதிலும், தேவபக்தியற்ற நடத்தையை வெளிக்காட்டுவதிலும் தொடர்ந்து நிலைத்திருப்பார்கள் என்று கர்த்தர் அறிந்தார். இப்படிப்பட்ட தனி நபருக்கான ஒரு பெயரை ஆவியானவர் நமக்குக் கொடுத்தார்: அவர் "வேதப் புரட்டனான"[31] மனிதராய் இருக்கிறார் (3:10). பிரிவினை என்பதே சண்டையின் கனியாக உள்ளது.

இப்படிப்பட்ட நபரைக் கையாளுவதில் பின்பற்றப்பட வேண்டிய ஒட்டம் 3:10ஆ வில் தரப்பட்டுள்ளது. வேதப்புரட்டராயுள்ள ஒரு மனிதருக்கு முதல் மற்றும் இரண்டாம் "எச்சரிக்கையை" (மத். 18:15-17ஐக் காணவும்) சகோதரர்கள் கொடுக்க வேண்டும். இந்த முயற்சிகள் நன்மைக் கான மாற்றம் எதையும் உண்டாக்கவில்லையென்றால், உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் அவரை (வேதப்புரட்டரை) "புறக்கணிக்க" வேண்டும். முறைப்படி புத்தி கூறப்பட்டு(ம்) வேதப்புரட்டராயுள்ள மனிதரைச் சந்திக்கும் எவரொருவரும் அவரை புறக்கணிக்க அல்லது விட்டு விலக வேண்டும் என்று பவுலினால் கூறப்பட்ட/கேட்டுக் கொள்ளப்பட்ட இந்த வேண்டுகோளை கவனமாய்க் கைக் கொள்வார்களாக. அதாவது, நாம் அவரது வேதப்புரட்டான ஆவியை விட்டு விலகி, கர்த்தருடைய இரத்தத் தினால் கிரயம் கொள்ளப்பட்ட சரீரத்தைப் பிரிக்கும்படி வளைகின்ற எந்த

நபருனுடம் அல்லது குழுவுடனும் சேர்ந்து கொள்ள மறுத்து விட வேண்டும் (1 கொரி. 1:10; ரோமர் 16:17, 18; அப். 20:29-31). ஒன்றுமறியாத சகோதரர்கள் பலர் சாத்தானின் திட்டமிட்ட இந்த நடவடிக்கையினால் புறம்பே இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கர்த்தருடைய சரீரத்தில் உள்ள எந்த உறுப்பினருக்கும் எதிராக இப்படிப்பட்ட தைரியமான/அழுத்தமான மற்றும் தீர்மானமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது ஏன்? (அவரது சிந்தையையும் நடக்கையையும் மாற்றுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட பின்பு) இந்த வேளையில், இப்படிப்பட்ட ஒருவர் "நிலை தவறியவர்"[32] (3:11) என்று நாம் "அறிகிறோம்" (3:11). இந்தக் கலகம் விளைவிப்பவர் கிறிஸ்துவிடமிருந்தும் அவருடைய வழிகளிடமிருந்தும் தம்மை மாற்றிப் போடுவதற்கு தம்மையே அனுமதித்துள்ளார். அவர் "பாவம் செய்கிறவராய்"[33] இருக்கிறார்; ஆகையால் அவர் "தன்னில் தானே ஆக்கினைத் தீர்ப்புடையவர்"[34] என்று தேவனுடைய சத்தியமும் அவரது நடக்கையும் செயல் விளக்கப்படுத்துகின்றன. சத்தியத்தினாலும் புத்திமதியினாலும் சகோதரர்கள் தம்மிடத்தில் காண்பிக்க நாடியதற்கு நேரெதிராகத் தாம் செயல்படுவதை அவர் அறிகிறார், மற்றும் அந்த நடக்கையில் தொடர்ந்து நிலைத்திருக்க அவர் விரும்புகிறார். அவரது நடக்கையும், மாறுவதற்கு அவர் காட்டும் மறுப்பும் அவர்மீது வைக்கப்படும் நியாயத்தீர்ப்புக்கு அவரை(யே) பொறுப்பாளியாக்குகின்றன. இது ஒரு கவலைக்குரிய சூழ்நிலையாக உள்ளது, ஆனால் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒருவர் (1 பேது. 2:21-25) இவ்வகையான நடக்கையில் தொடர்ந்து நிலைத்திருந்தால் அவர் புறக்கணிக்கப்பட வேண்டும் (2 தெச. 3:6, 14, 15).

## பாடம் 6: முடிவில் விளக்கங்கள் (3:12-15)

மிகவுயர்வான இந்த நிருபத்தின் அடுத்த பகுதியை, பவுலிடமிருந்து வந்த தனிப்பட்ட குறிப்புகள் இன்றைய நாட்களில் சகோதரர்களுக்குக் கூற அதில் ஒன்றுமில்லை என்றெண்ணிக் கடந்து போக நாம் சாய்கின்றோம். அது என்ன ஒரு தவறாக உள்ளது!

### சரிப்படுத்துதல்களும் சாதனைகளும் (வ. 12-14)

அர்த்தெமா, தீகிக்கு மற்றும் தீத்து ஆகியோரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பவுல் மாற்றி அனுப்புவது பற்றி நாம் வாசிக்கையில் (3:12) இது, நாம் கர்த்தருடைய ஊழியத்தில் எப்பொழுதுமே சூழ்நிலைக்குத் தகுதியாக இருக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. முக்கியமான சகோதரர்களினால் செய்யப்பட்ட ஊழியத்தில்

மாற்றத்திற்காகப் பவுலின் அழைத்தலானது நமக்கு ஒரு பாடத்தைப் போதிக்கின்றது. தேவை மற்றும் அநுகூல நிலை உள்ள பகுதிகளுக்குச் சகோதரர்கள் கடந்து செல்லட்டும் (தீத்து 1:5; அப். 13:1-13; 16:6-10ஐக் காணவும்). பின்வரும் அறைகூவல் விடுக்கும் பாடலின் ஆவி நம் ஒவ்வொருவருக்கும் தேவை:

> நான் செல்லும்படி நீர் விரும்புமிடத்திற்கெல்லாம் செல்வேன், அன்பு கர்த்தரே,
> மலையின் மீது, சமவெளியிலோ அல்லது சமுத்திரத்திலோ;
> நான் சொல்லும்படி நீர் விரும்புவதையெல்லாம் சொல்வேன், அன்பு கர்த்தரே,
> நான் இருக்கும்படி நீர் விரும்பும் வண்ணமாகவே இருப்பேன்.[35]

சரிப்படுத்துதல்கள் என்பவை ஊழியர்களுக்கு அளிப்புக்களுக்காக அழைக்கும். அது, நியாய சாஸ்திரியாகிய சேனாவுக்கும் அப்பொல்லோவுக்கும் உதவி அளிக்கும்படி பவுல் கொடுத்த ஆணையில் உள்ளடக்கப் பட்டிருக்கிறது (3:13). அவர் தீத்துவிடம், “அவர்களுக்கு ஒரு குறைவுமில்லாதபடிக்கு அவர்களை ஜாக்கிரதையாய் வழிவிட்டனுப்பு”[36] என்று கூறினார். இந்த ஊழியமானது “ஜாக்கிரதையாய்”[37] செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இதே ஆவியானது இன்றைய நாட்களில் “சுவிசேஷத்துடன் செல்லுகின்றவர்களுக்கு” உதவி செய்ய நாம் நினைக்கையில் சகோதரர்கள் இருதயங்களில் துடிக்கின்றதா?

நாம் சூழ்நிலைக்குத் தக்கவாறு நம்மைத் தகவமைத்துக் கொள்கிறவர்களாக, மற்றும் சரிப்படுத்துதல்களை ஏற்படுத்த மனதுள்ளவர்களாக இருந்தால், நாம் சாதனைகளையும், செயல் வெற்றிகளையும் மகிழ்வுடன் அனுபவிக்க முடியும். கிறிஸ்தவர்கள் இதைச் செய்யக் “கற்றுக் கொள்வது”[38] அவசியம் என்று பவுல் அறிந்தார்(3:14). நாம் நற்செயல்களில் “ஈடுபடுகையில்”[39] இந்த ஆவியுடனேயே வாழ வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்தத் தேவைகள் “அவசியமானவைகளாய்”[40] இருப்பதினால், நாம் நற்செயல்களைக் கட்டளைகள் என்ற வகையில் காண வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் தம் நிருபத்தின் கடைசிக் குறிப்புகளில் கூட தமது கவனம் செலுத்தும் முனையை மாற்றிக் கொள்ளாதிருந்தார். அவர் தீத்துவையும் எல்லாக் கிறிஸ்தவர்களையும் நற்செயல்களில் தொடர்ந்திருக்கும்படியும் மற்றும் இந்த நடைமுறையை தேவையானவைகளாகவும், சரியானவைகளாகவும் மற்றும் தகுதியானவைகளாகவும் காண வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்!

சகோதரர்களால் செய்யப்படும் இந்த சரிப்படுத்துதல்கள் மற்றும் சாதனைகள் யாவையும் தகுதி வாய்ந்த இலக்கு ஒன்றைக் கொண்டுள்ளன: “நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி.” யோவான் 15:8ல் கிறிஸ்து, “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்” என்று உரைத்தார்.

## மகிமைமிக்க ஒன்றுகூடுதல் (வ. 15)

பவுலின் வார்த்தைகள் அவருக்கும் அவரது உடன் ஊழியர்களுக்கும் மத்தியிலிருந்த ஒன்றுகூடுதலின் ஆவியைப் பிரதிபலிக்கின்றது: "என்னோ டிருக்கிற யாவரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்" (3:15). அந்த ஒன்றுகூடுதலானது பிற இடங்களில் இருந்த கிறிஸ்தவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது: "விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லு."

கிறிஸ்தவர்களுக்கு மத்தியிலான இந்த குடும்ப(ப்பாங்கான) ஒன்று கூடுதல் திகைப்படையச் செய்யக் கூடியதாக உள்ளது. ஒருவர் இன்னொரு நாட்டிற்கு பிற இனத்தவர் மற்றும் கலாச்சாரங்களின் மத்தியில் சென்று உடனே ஐக்கியத்தின் வளமையைக் கண்டறிய முடியும். தேவனின் பிதாத்துவமும், மனிதரின் சகோதரத்துவமும் மேன்மையான/உண்மை யான வழியில் மலர்ந்து செழிக்கின்றன. அந்த "கிருபை உங்களனை வரோடுங்கூட இருப்பதாக" என்ற தேவனுடன் ஒன்றுகூடுதல் உறவு படுகின்றது.

## தொகுப்புரையில்

இந்தக் குறுகிய ஆனால் குறிப்பிடத்தக்க நிருபமானது இவ்வாறு முடிகின்றது. இது பூமியில் இருந்த இருளான ஒழுக்கமும் இருளான ஆவிக்குரிய நடக்கையும் கொண்ட பகுதிகள் ஒன்றுக்கு அனுப்பப் பட்டதால் இது யெகோவா தேவனும் கிறிஸ்துவின் மூலமான அவரது மீட்பின் திட்டமும் உண்மையில் நமக்குப் போதுமானவைகள் என்பதற் கான தெய்வீக செயல் விளக்கம் என்ற வகையில் மிகவும் ஒளியுடன் பிரகாசிக்கின்றது (2 கொரி. 3:4-6).

பவுல், தீத்து மற்றும் கிரேத்தாவின் வரலாற்றில், தீத்து தம்மைச் சுற்றிலுமிருந்த சீர்குலைந்த மக்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி வற்புறுத்தப்பட்ட நற்செய்தியானது உட்பிணைக்கப்பட்டுள்ளது. அவர்களின் சூழ்நிலை/நிலைமையை அறிந்த பவுல், தீத்து செய்ய முடிந்தவை மற்றும் செய்ய வேண்டியவை குறித்து (கூறுவதில்) தடுமாற்றம் அடையாதிருந்தார்.

> [பவுல் தீத்துவிடம் பின்வருமாறு கூறுவதில்லை:] "அவர்களை விட்டுவிடு. அவர்கள் நம்பிக்கை வைக்கப்பட இயலாதவர்கள் மற்றும் எல்லா மனிதர்களும் இதை அறிவார்கள்." அவர் பின்வருமாறு கூறுகின்றார்: "அவர்கள் மோசமானவர்களாய் இருக்கின்றனர் மற்றும் எல்லா மனிதர்களும் இதை அறிவார்கள். நீ சென்று அவர்களை மனம் மாற்று." எந்த ஒரு நபரையும் தேறாதவர் என்று கருத மறுக்கும் ஒரு கிறிஸ்தவ ஊழியர் அல்லது சுவிசேஷ ஊழியரின் தெய்வீக நம்பிக்கைக் குரிய கருத்தை ஒரு சில வசனப் பகுதிகளே இவ்வளவு தெளிவாக செயல்விளக்கப்படுத்துகின்றன. தீமை அதிகமாய் இருக்குமளவுக்கு அறைகூவல் பெரியதாய் உள்ளது. எதிர்கொண்டு வெற்றி கொள் வதற்கு எந்தப் பாவமும் இயேசு கிறிஸ்துவின் கிருபைக்கு மிகப்

*பெரியதாக இருப்பதில்லை என்பது கிறிஸ்தவ உறுதிப்பாடாக உள்ளது.*[41]

*இவ்விதமான வெளிச்சம் நோக்கிய நம்பிக்கையுடன் சொல்வதற்கான இவ்விதமான வரலாற்றுடனும், நாம் தேவனுடைய சொந்த உடமையான மக்கள் என்ற வகையில் "நற்கிரியைகளைச் செய்வதில் வைராக்கியமுள்ளவர் களாக" (2:14) பூமியின் இருளான பகுதிகளுக்கு முன்னேறிச் செல்வோமாக!*

---

*குறிப்புகள்*

[1]*அதிகாரம்* (Gk.: *exousia*) - *"ஒரு ஆள்பவர், மனித நீதிபதி ... தீத்து 3:1 ..."* (Thayer, 225, C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 497. [2]*கீழ்ப்படிதல்* (Gk.: *peitharcheo*) - *"(ஒரு ஆள்பவருக்கு அல்லது ஒரு மேலதிகாரிக்கு) கீழ்ப்படிதல் அப். 5:29, 32 ... நீதிபதிகள், தீத்து 3:1 ... சிலவற்றை அறிவுரை கூறும் ஒருவரைக் கவனித்துக் கேட்டல்."* [3]*தயாராக இருத்தல்* (Gk.: *etoimos*) - *"செயலாற்றத் தயாராக இருத்தல் ... வாய்ப்புள்ள, பருவ காலத்திற்குக் தக்க; தயாராக உள்ள, ஆயத்தமாக உள்ள"* (Thayer, 255). [4]*தூஷித்தல்* (Gk.: *blasphemo*) - *"பழி தூற்றுதலாய்ப் பேசுதல், நிந்தித்தல், திட்டுதல் ... துன்மார்க்கமாய்ப் பேசிக் கொண்டிருத்தல் ...* [குறிப்பாக,] *தேவன் அல்லது பரிசுத்த விஷயங்கள் மீது செலுத்த வேண்டிய பயபக்தி குறைபாட்டின் காரணமாக வேண்டுமென்றே இறுமாப்பாகப் பேசுகிறவர்கள் பற்றியது"* (Thayer, 102). [5]*சண்டை பண்ணாமை* (Gk.: *amachos*) - *"... (எதிர்த்து) நின்றிராமை ... சண்டையிலிருந்து மிகவும் அரிதாக விலகியிருத்தல் ... சண்டை செய்யாதிருத்தல்: 1 தீமோ. 3:3; தீத்து 3:2"* (Thayer, 31). [6]பொறுமை (Gk.: *epieikes*) - *"சரியாய் இருத்தல் ... சமான நிலை, நியாயமான, அடக்கம்/மென்மை, 1 தீமோ. 3:3; தீத்து 3:2; 1 பேது. 2:18; யாக். 3:17 ... பிலி. 4:5"* (Thayer, 238). [7]*சாந்த குணம்* (Gk.: *prautes*) - *"... சாந்த குணம், தாழ்மை, மரியாதை, சாந்தமான பண்பு, தாழ்மை ... தீத்து 3:2 ... கலா. 5:23; கொலோ. 3:12; எபே. 4:2 ... 2 தீமோ. 2:25 ... ஒரு மூப்பரின் பண்பு, 1 தீமோ. 3:2"* (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 705). [8]William Barclay, *New Testament Words* (London: SCM Press, 1964), *240 முதல்.,* [9]*புத்தியீனம்* (Gk.: *anoetos*) - *"... புரிந்து கொள்ளாமை, ஞானமற்ற தன்மை ... 1 தீமோ. 6:9 ..."* (Thayer, 48)*; "... மதிநுட்பம் இல்லாமை ... சிந்தியாமை ... புலன் சார்ந்த"* (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 60). [10]*கீழ்ப்படியாமை* (Gk.: *apeitheis*) - *"... இணங்க வைக்கப்பட இயலாமை, விசுவாசமற்ற, ... ரோமர் 1:30; 2 தீமோ. 3:2 ... தீத்து 1:16; 3:3"* (Robinson, 69).

[11]*வழி தப்பி நடத்தல்* (Gk.: *planao*) - *"... வழி விலக்கி நடத்திச் செல்லுதல், ... அலைந்து திரிதல் ... மயக்கி இழுத்துச் செல்லுதல் ... தீத்து 3:3, அவர்களின் சிந்தைகள் வழி விலகிச் செல்கின்றன, எபி. 3:10 ... ஒருவரின் நியாயத்தீர்ப்பில் தவறைக் காணுதல் ... மாற். 12:24 ... 2 தீமோ. 3:13"* (Arndt and Gingrich, 671)*; "... தவறுக்குக் காரணமாகுதல் ... தவறான நியாயத்தீர்ப்பை வடிவமைத்தல் ... சத்தியத்தில் இருந்து (விலக்கி) மோசம் போக்குதல்"* (Robinson, 586). [12]*இச்சைகள்* (Gk.: *epithumia*) - *"தடை செய்யப்பட்டவற்றின் மீதான விருப்பம் என்ற வகையில் மிக மோசமான கருத்தில்"*


(Arndt and Gingrich, 293)*; "சந்தோஷங்கள்"* (Gk.: *hedone*) - *என்பதுடன் இணையாக வைக்கப்பட்டது - "சந்தோஷப்படுத்துதல், மகிழ்வாய் அனுபவித்தல், ... புலன்களின் சந்தோஷங்கள் பற்றியது; லூக். 8:14 ... தீத்து 3:3; யாக். 4:3; 2 பேது. 2:13 ... விருப்பம், பசி, இச்சை, யாக். 4:1"* (Robinson, 323). [13]*அடிமைப்பட்டிருத்தல்* (Gk.: *douleuo*) - *"மோசமான ஒரு கருத்தில், கீழ்தரமான வல்லமை சிலவற்றிற்கு அடிமைகளானவர் களைப் பற்றியது, இணங்குதல், ஒருவர் தன்னை கொடுத்து விடுதல் ... ரோமர் 6:6 ... 7:25 ... தீத்து 3:3 ... கண்ணியில் அகப்படுதல், பிடிபடுதல், ... வேலை/தொண்டு செய்தல், கீழ்ப்படிந்திருத்தல் ... இன்னொருவரின் சித்தத்திற்குத் தன்னையே கொடுக்கிற ஒருவர், 1 கொரி. 7:23 ... யோவா. 8:34; ரோமர் 6:17, 20"* (Thayer, 157-58). [14]*துர்க்குணம்* (Gk.: *kakia*) - *"புதிய ஏற்பாட்டில், மோசமான தன்மை, ஒழுக்க ரீதியான கருத்தில் பொல்லாங்கு ... துர்க்குணம், மோசமான தன்மை ... யாக். 1:21; 1 பேது. 2:16 ... தீய குணம் ... எபே. 4:31; கொலோ. 3:8; தீத்து 3:3; 1 பேது. 2:1"* (Robinson, 370). [15]*பொறாமை* (Gk.: *phthonos*) - *"பொறாமை, எரிச்சல் ... தீத்து 3:3 ... ரோமர் 1:29"* (Arndt and Gingrich, 865). [16]Lewis C. Henry, *Best Quotations for All Occasions* (Greenwich, Conn.: Fawcett Publications, 1945), 68. [17]*பகைத்தல்* (Gk.: *stugetos*) - *"வெறுக்கப்பட்ட ... வெறுத்து ஒதுக்கப்பட்ட, வெறுப்பு நிறைந்த, தீத்து 3:3"* (Thayer, 591). [18]*தயவு* (Gk.: *chrestites*) - *"ஒழுக்க ரீதியான நற்பண்பு, நேர்மை ... இரக்க குணம். ரோமர் 2:4 ... கொலோ. 3:12; தீத்து 3:4"* (Thayer, 672). [19]Robinson, 787. [20]*அன்பு* (Gk.: *philanthropia*) - *"மனித இனத்தின் அன்பு, உபகார சிந்தை ... தீத்து 3:4"* (Thayer, 653)*; "... தேவ தயவு ... அதிகாரிகளின் ஒழுக்க நெறி என்ற வகையில் ... உபசரிப்புத் தன்மையின் கருத்திலும் கூட"* (Arndt and Gingrich, 866).

[21]*இரக்கம்* (Gk.: *eleos*) - *"... இரக்கம்: பாவிகள் மீது தேவன் காண்பிப்பது, தீத்து 3:5 ... இடர்ப்பாட்டில் இருப்பவர்களுக்கு உதவத் தயாராய் இருக்கும் பண்பு ... பரிதாபமான மற்றும் துன்புற்ற மக்களை விடுவிக்கும் விருப்பத்துடன் இணைக்கப் பட்டு அவர்களிடம் காண்பிக்கப்படும் நல்ல எண்ணம்"* (Thayer, 203-4). [22]*"தீத்து நிருபத்தில் இப்பொழுது நாம் கவனித்துக் கொண்டிருக்கும் வசனப் பகுதியானது நீதியின் கிரியைகளுக்கு நேர்மாறானதாக வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தின் செயல்பாடாக உள்ளது. இது ஒருவர் இரட்சிப்பைப் பெறத் தகுதிப்படும் நீதியின் கிரியையாய் இருப்ப தில்லை, எனவே இரட்சிப்பு என்பது 'கிரியைகளினால் ஆனதல்ல' என்பதை வலியுறுத்தம் அவ்வசனப் பகுதிகளில் இது முன்னதாக சேர்க்கப்பட்டிருப்பதில்லை"* (Raymond Kelcy, "Titus," *Messages of the Books of the New Testament* [Fort Worth, Tex.: Fort Worth Christian College Bookstore, 1961], 254). [23]*புதிதாக்குதல்* (Gk.: *anakainosis*) - *"புதுப்பித்தல், மேன்மைக்காக முழுவதும் மாற்றுதல், ... பரிசுத்த ஆவியானவரால் செயல்படுத்தப்படுதல், தீத்து 3:5"* (Thayer, 38). *அப். 2:38; 5:32ஐக் காணவும்; ரோமர் 8:9.* [24]Lloyd Cory, *Quotable Quotations* (Wheaton, Ill.: Victor Books, 1985), 118. [25]*திட்டமாய்* (Gk.: *diabebaiomai*) - *"வலியுறுத்துதல்"* (Arndt and Gingrich, 180). [26]*ஈடுபடுதல்* (Gk.: *proistasthai*) - *"முன்னால் அமைத்தல் அல்லது வைத்தல் ... 1 தீமோ. 5:17 ... ஒரு பாதுகாவலராயிருத்தல் ... பராமரித்தல், கவனம் கொடுத்தல் ... நேர்மையான தொழில்களை அறிக்கையிடுதல்"* (Thayer, 539-40). *இந்த அறைகூவல் களைச் செயல்படுத்துவதில் சுவிசேஷ ஊழியர் தாமே தொடங்கு பவராய் இருக்க வேண்டும்.* [27]*விட்டு விலகுதல்* (Gk.: *periistemi*) - *"ஒருவர் ஒன்றினைப் பற்றித் தம்மையே திருப்பிக் கொள்ளுதல், ... சிலவற்றை தவிர்ப்பதின் நோக்கத்திற்காக, ஆகவே, தவிர்த்தல், விட்டு விடுதல், 2 தீமோ. 2:16; தீத்து 3:9"* (Thayer, 503). [28]*புத்தியீனம்* (Gk.: *moros*) - *"கற்றுக் கொள்ளுதல் அல்லது கல்வியறிவு இல்லாமை, 1 கொரி. 1:27; 3:18; 4:10 ... முன் சிந்தனை அல்லது ஞானம் இல்லாத, மத். 7:26;*

*23:17, 19 ... வெறுமையான, பயனற்ற ... 2 தீமோ. 2:23; தீத்து 3:9 ... பக்தியற்ற, தேவனற்ற (ஏனென்றால், இப்படிப்பட்ட மனிதர் இரட்சிப்புடன் தொடர்புடைய வற்றைப் புறக்கணித்து இழிவாகக் கருதுகிறார்), மத். 5:22"* (Thayer, 420). [29]வழக்கு (Gk.: *mache*) - "*ஆயுதம் கொண்டவர்களின் ... போட்டி, யுத்தம், மாறுபட்ட கருத்துள்ள நபர்கள் பற்றியது ... சண்டை: 2 கொரி. 7:5; 2 தீமோ. 2:23; யாக். 4:1 ... தீத்து 3:9"* (Thayer, 394). [30]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 303.

[31]வேதப் புரட்டு (Gk.: *hairetikos*) - "*ஒரு பிரிவினை, ஒரு வேதப் புரட்டைக் காணும் அல்லது அதற்குரியவராயிருக்கும் ஒரு நபர், தீத்து 3:10 ... ஒரு வேதப் புரட்டன்"* (Robinson, 17) "*பிரிவினைகளுக்குக் காரணமாகுதல்"* (Arndt and Gingrich, 23)*; "சூழ்ச்சித் திறனுள்ளவர் ... கள்ள போதனையைப்/உபதேசத்தைப் பின்பற்றுபவர்"* (Thayer, 16). [32]*நிலை தவறுதல்* (Gk.: *exestraptai*) - "*வெளித்திரும்புதல் அல்லது முறுக்கிக் கொள்ளுதல் ... உட்புறம் வெளிப்புறமாய்த் திரும்புதல் ... திரும்புதல், மாறுதல், ஒருவரின் வாழ்வையும் வழிகளையும் மாற்றுதல், ... கவிழ்த்துப் போடுதல்/நாசப்படுத்துதல், ... விசுவாசத்தில் ... தீத்து 3:11"* (Robinson, 234)*; நிலை தவறுவதில் ஒரு முழுமையான உற்பத்திப் பொருள்.* [33]*பாவம்* (Gk.: *harmartanei*) - "*... ஒரு தவறுதல், தவறு, பிழை ... சரியானது, கடமை, சட்டம் ஆகியவற்றிலிருந்து மனப்பூர்வமாய் விலகிச் செல்லுதல்"* (Robinson, 35). [34]*தன்னில் தானே ஆக்கினைத் தீர்ப்புடையவர்* (Gk.: *autokatakritos*) - "*ஒருவர் தம்மாலேயே நியாயம் தீர்க்கப்படுதல்"* (Robert Young, *Analytical Concordance to the Bible* [New York: Funk & Wagnalls Co.,1893], 196). [35]Mary Brown, "I'll Go Where You Want Me To Go." [36][*அவரது*] *வழியில்* [*அவருக்கு*] *உதவு* (Gk.: *propempson*) - "*துணையாளர்கள், பயணத்திற்கான உணவு, பணம், வழி வசதிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதினால் ஒருவரின் பயணத்தில் உதவுதல்" ... 1 கொரி. 16:11 ... தீத்து 3:13* (Arndt and Gingrich, 716). [37]*ஜாக்கிரதையாக* (Gk.: *spoudazo*) - "*... அவசரப்படுதல் ... 2 தீமோ. 4:9, 21; தீத்து 3:12 ... ஒருவர் தம்மை ஈடுபடுத்துதல், உழைத்தல், ஊக்கம் கொடுத்தல் ... கலா. 2:10; எபே. 4:3 ..."* (Thayer, 585). [38]*கற்றுக் கொள்ளுதல்* (Gk.: *manthanetosan*) - இவ்வார்த்தையானது, "*பிறரிடம் விசாரித்தல் அல்லது போதனையிலிருந்து, படிப்பில் இருந்து, உற்று நோக்குதலி லிருந்து, கற்றல், போதிக்கப்படுதல் ஆகியவற்றிலிருந்து கற்றலில் பொதுவான மற்றும் அர்ப்பணிப்புள்ள முயற்சிக்கு அழைக்கின்றது ... 1 தீமோ. 2:11; 2 தீமோ. 3:7 ... மத். 11:29 ... எவரொருவரையும், அதாவது அவரது உபதேசங்கள், நல்லொழுக்க விதிகள் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளுதல் ... அறிவிக்கப்பட்டிருத்தல், ... புரிந்து கொள்ளுதல், அறிந்து கொள்ளுதல், வெளி. 14:3 ... அனுபவத்தினால் கற்றுக் கொள்ளுதல், ... வழக்கமாகச் செய்தல், பழக்கப்பட்டிருத்தல் ... 1 தீமோ. 5:4, 13; தீத்து 3:14"* (Robinson, 442). [39]*ஈடுபடுதல்* (Gk.: *proistemi*) - "*ஊக்கமாயிருத்தல், நடைமுறைப்படுத்துதல், பராமரித்தல், ஏதொன்றிற்கும் அக்கறையாய் இருத்தல்"* (Robinson, 620). [40]*அவசியமானவை* (Gk.: *anagkaios*) - "*அவசியப்படுத்துதல், கட்டாயம், ... அவசியம் ... இது கடமையின் விஷயமாக உள்ளது, எபி. 8:3 ... சரியாக மற்றும் தக்க வகையில் சிந்தித்தல், 2 கொரி. 9:5; பிலி. 2:25"* (Robinson, 43-44).

[41]Barclay, 278.


ரோமாபுரி
இல்லிரிக்கம்
தல்மாத்தியா
திரேஸ்
கருங்கடல்
மக்கெதோனியா
தெசலோனிக்கே
நிக்கொப்போலி
துரோவா
அகாயா
கருங்கடல்
கலாத்தியா
அத்தேனே
கொரிந்து
எபேசு
ஆசியா
அந்தியோகியா
லிக்கவோனியா
இக்கோனியா
மிலேத்து
லீஸ்திரா
சிலிசியா
தர்சு
பம்பிலியா
லீசியா
அந்தியோகியா
கிரேத்தா
தீவு
சீப்புரு
சீரியா
1, 2 தீமோத்தேயு, தீத்துவில்
குறிப்பிடப்படும் இடங்கள்
MILES 0 50 100 150 200
KMS 0 50 100 200 300
மத்திய தரைக் கடல்
எருசலேம்

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*ஒன்றைக் குறிப்பிடவும்:* ❒ ஆண் ❒ பெண்

*பெயர்:* ____________________

*முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)*

____________________

____________________

____________________

____________________

*முகவரியில் மாற்றம் இருக்குமானால், பழைய முகவரியைத் தெரியப் படுத்தவும்:*

____________________

____________________

____________________

____________________

Email *விலாசம்:* ____________________

*எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்?* ____________________

*அது எங்கிருக்கிறது?* ____________________

*பிரசங்கிப்பவரின் பெயர்:* ____________________

*நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்):*

❒ *பிரசங்கிப்பவர்* ❒ *அங்கத்தினர்*

❒ *வேதபாட வகுப்பு ஆசிரியர்* ❒ *அங்கத்தினரல்லாதவர்*

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):*

❒ இல்லை.

❒ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.

❒ ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர் ____________________

*(அடுத்த பக்கம் பார்க்கவும்)*

*எந்த மொழியில் வெளியீடுகளைப் பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்):*

❐ *ஆங்கிலம்* ❐ *தமிழ்* ❐ *ஹிந்தி* ❐ *தெலுங்கு*

*நீங்கள் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை எவ்விதம் உபயோகிக்கிறீர்கள்/உபயோகிப்பீர்கள்?*

________________________________________

________________________________________

*இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து அவர்களுக்காக இன்னுமொரு படிவத்தைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.*


Truth for Today
P.O. Box 5311
Shivajinagar, Bangalore - 560 001